RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s-222817

# மாசிமக விழாவும் பண்பாடும்

ப. பிரியா [அ, *], இரா. சசிகலா [அ]

[அ] தமிழ்த்துறை, பிரிஸ்ட் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா.

# Masi Magam Festival and Culture

P. Priya [a, *], R. Sasikala [a]

[a] Department of Tamil, Prist University, Thanjavur, Tamil Nadu, India

* Corresponding Author: priyaprist@gmail.com

Received: 20-09-2022
Revised: 30-10-2022
Accepted: 13-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Maasi Magam festival is celebrated in a grand manner in the Puducherry region. In this article, not only the deities of Pondicherry but also from parts of Tamilnadu come to Theerthavari and gather at one place to bless the people, perform the memorial ritual, how water worship is mentioned in literature, the reason for the name Maasi Magam, the purpose of bathing in Magha star, people's beliefs about Maasi Magam, Theerthavari to the deity etc. are mentioned in this article.

**Keywords:** Maasi Magam, Theerthavari, Deity, Pondicherry

## முன்னுரை

புதுச்சேரி மக்கள் ஒன்றுகூடி மிகச் சிறப்பாகச் செய்கின்ற விழாக்களில் ஒன்றாக மாசிமகம் அமைகின்றது. பௌர்ணமி நாளன்று மக நட்சத்திரமும், சூரியனும் சந்திரனும் நேர்க்கோர்ட்டில் கூடுகின்ற நாளை மாசிமகமாகக் கொண்டாடுகின்றனர். அந்நாளில் இறந்த முன்னோருக்கு நீத்தார் கடனைச் செய்து அவர்கள் சொர்க்கம் அடைந்ததாகவும் மகிழ்கின்றனர். இத்தகைய நீத்தார் கடன் இலக்கியத்தில் எவ்வாறு சுட்டிச் செல்கின்றனர் என்றும், களப்பகுதியில் எவ்வாறு பயன்பாட்டில் உள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இலக்கியத்தில் நீர் வழிபாடு

'புனலாட்டு' என்பது நீரில் குளித்தல் எனப் பொருள்படும். இதனை நீராடல் எனவும் சுட்டுவர்.

“பருவமாற்றம் காரணமாக மழை பொழிந்து ஆற்றில் நீரோட்டம் ஏற்பட அதனை வரவேற்கும் விதமாக மகிழ்ச்சிப்பெருக்கால் நீராடி வழிபடுவது புதுப்புனலாடலின் நோக்கமாகும். புதுப்புனல் ஆடுதல் என்பது இன்றைய ஆடிப்பெருக்கினை நினைவுப்படுத்தும் என்பர்”

தங்கள் வாழ்க்கைக்கு அடிப்படையாக விளங்கும் நீரை வாழ்த்தி வழிபடுவதும் வரம் வேண்டுவதும் வளமை வேண்டிச் செய்யப்பட்ட ஒன்றாகும் (Gandhi, 2003).

திருவள்ளுவர் திருக்குறளில் கடவுள் வாழ்த்தை அடுத்தாற்போல் வானை முதன்மைப்படுத்திப் பாடியிருப்பது மழையின் சிறப்பு கருதிய வேளாண்மை மக்களின் வாழ்க்கை எதிர்ப்பார்ப்பைச் சுட்டுவது எனலாம். சங்க இலக்கியங்கள் கூறுகின்ற நீராடலும் நீர் தொடர்பான

சடங்குகளும் மக்களது வாழ்க்கையில் பெற்றிருந்த சிறப்பைப் பின்வரும் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. நற்றிணையில்,

"பெரும்புலவர் விடியலின் விரும்பிப் போத்தந்து

தழையுங் தாருந் தந்தனன் இவனென

இழையணி ஆயமொடு தகுநாண் தடை இத்

தைத்திங்கள் தன் கயல் படியுற் பெருந்தோள்"

எனும் பாடல் தலைவனும் தலைவியும் தை நீராடியதை எடுத்துக் கூறுகிறது. நீரால் நிலம் வளமையடைவது போன்று, மனிதன் தன் வாழ்வில் வளமை வேண்டித் தைந்நீராடினர் (Manikkam, 2009).

கடல் ஆடுவதும், நீர்நிலைகளில் நீராடுவதும் மக்கள் வாழ்க்கையில் ஏற்படுகின்ற பிணி, தீங்கு நீங்குவதற்காக என்பதைப் பட்டினப்பாலையின் பின்வரும் அடிகள் குறிக்கின்றன.

"------------ஒலிகடல்

தீது நீங்கக் கடலாடியும்

மாசு போகப் புனல் படிந்தும்

அலவனாட்டியும் உரவுத்திரை உழக்கியும்" (Manikkam, 2002)

இவ்வடிகள் வினை நீங்க கடலில் நீராடுவதும் மனித மனங்களின் மாசு நீங்க புனலாடுவதும் மக்கள் வாழ்க்கையில் இடம்பெற்றிருந்தன என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இவ்வழக்கம் இன்றும் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. கங்கையில் நீராடுவதும், காவிரியில் நீராடுவதும் குறிப்பிட்ட காலங்களில் கடலில் நீராடுவதும் இன்றும் நிலைக்கொண்டுள்ளன. ஆற்றங்கரை நாகரிகங்களில் வாழ்ந்த மக்கள் இறந்தவர்களின் சடலங்களை ஆற்றில் விட்டு, அதில் முன்னோர்களது ஆவி உறைகிறது என நம்பி அவற்றைப் புனிதமாகக் கருதி வழிபாடு போன்ற செயல்களைச் செய்துள்ளமையைக் காணமுடிகின்றது. இந்நம்பிக்கை பிற்கால வழக்கில் இறந்த முன்னோரை நினைவுகூறும் பொருட்டு நீர் நிலைகளில் முழுகிப் புனிதம் பெறுகின்ற வழக்கத்தை ஏற்படுத்திருக்க வேண்டும்.

சங்க காலத்திற்குப் பிறகு வந்த பாடல்களில் விதி நம்பிக்கையும், நல்வினை, தீவினை நம்பிக்கையும் மிகுதியாக இருப்பதை அறியமுடிகிறது அப்பர். ஞானசம்பந்தர் இருவரும் குறிப்பிட்ட நட்சத்திரங்கள் கூடிய நன்நாளில் நீராடுவதால் பிறவிப்பிணி நீங்கும் என்று பின்வரும் பாடல்களில் குறிப்பிடுகின்றனர். அப்பர் தேவாரத்தில்,

"கங்கை யாடிலென் காவிரி யாடிலென்

கொங்கு தண்குமரித் துறையாடி லென

-----------------------------------------------

எங்கும் ஈசனே னாதவர்க் கில்லையே" (Ramasubramaiyam, 1998a)

எனவும் ஞானசம்பந்தர் தேவாரத்தில்,

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்

கடலாட்டு கண்டான் கபாலிச் சுரமமர்ந்தான்" (Ramasubramaiyam, 1998b)

எனவும் மாசிமகக் கடலாடு பற்றியும், கடலாடிய தெய்வம் பற்றிய குறிப்பினை ஞானசம்பந்தரும், கடலாடுவதால் உடலும் உள்ளமும் வினை நீங்குகின்ற பாங்கை அப்பரும் எடுத்துக்காட்டுகின்றனர். தூய நீருக்குப் பல ஆற்றல்கள் உண்டு என்று பண்டையோர் நம்பினர்.

“தூயநீர் என்று சில இடத்து நீரினைக் கருதினர். இறந்தவன் சாம்பலை அங்கு கரைத்தால் அவன் ஆவி சுவர்க்கம் புகும் என்று எண்ணினர் என்பர்” க.ப. அறவாணன் (Aravanan, 1993).

## மாசிமகம் - பெயர்க்காரணம்

தமிழரது வாழ்வில் நீராடுதல் என்பது முக்கிய பங்காகக் கருதிச் செய்யப்பட்டு வருகிறது. இயற்கையை மையாக வைத்து வாழத்தொடங்கிய மக்களுக்குக் கோள்களும் நட்சத்திரங்களும் மாதமும் நாளும் முக்கியக் காரணங்களாக அமைந்தன. ஒவ்வொரு மாதத்திலும் வரக்கூடிய நிலவு தோன்றுதல், மறைதல், கோள்களின் நகர்ச்சியினால் ஏற்படுகின்ற இயற்கை நிகழ்வுகள், தட்பவெப்ப மாற்றங்கள் மக்களைப் பெரிதும் சிந்திக்கத் தூண்டின. சிந்தனையின் வெளிப்பாட்டினால் ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற அமாவாசை, பௌர்ணமி போன்ற வழிபாட்டிற்குரிய நாட்களாக மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு அமைந்த 12 மாதங்களில் மாசிமாதம் வருகின்ற பௌர்ணமி நாளன்று மகநட்சத்திரமும் சூரியனும் சந்திரனும் நேர்க்கோட்டில் கூடுகின்ற நாள் சிறப்புக்குரியதாகக் கருதப்பட்டு அந்நாளில் மாசிமகம் கொண்டாடப்படுகின்றது. பௌர்ணமி தினம், வழிபாட்டில் முழுப்பயனைத் தரும் எனும் நம்பிக்கை மக்களிடையே நிலவி வருவதால் இந்நாட்கள் வழிபாட்டிற்கு உரிய சிறப்பு நாட்களாக ஆக்கப்பட்டன.

## மக நட்சத்திரத்தில் நீராடுவதின் நோக்கம்

மக நட்சத்திரம் மோட்சத்தை அளிக்கும் சிறப்பிற்குரியது என்று சோதிட முறையில் கூறப்படுகிறது. மாசி மாதத்து மக நட்சத்திரமானது பாவத்தைப் போக்கும் சக்தி உடையது. எனவே, மாசிமகத்தன்று நீராடல் உற்சவம் நிகழ்த்தப்படுகிறது. இந்த நட்சத்திரம் கூடும் பௌர்ணமி நாளில் நீராடலை மேற்கொண்டால் மறுபிறவி இல்லை என்று மக்கள் நம்புகின்றனர். மக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் பார்த்தாலும் சமய நோக்கில் பார்த்தாலும் பாவத்தைப் போக்கும் விழாவாக மாசிமக விழா அமைந்துள்ளது.

“நீராடலை மையமாகக் கொண்டு மக்களின் பாவங்கள் நீங்குவதற்கும், இறைவன் மக்களுக்காக ஆறு கடல் பகுதியில் எழுந்தருளித் தீர்த்தவாரிக் கொடுத்து அருள் பாலிக்கும் முகத்தான் மக நட்சத்திரம் கூடும் நன்னாளில் மாசிமகம் கொண்டாடப்படுகிறது”

எனச் சுட்டுகிறார். மக்கள் மட்டும் அல்லாது தெய்வத்தையும் மாசிமகம் அன்று நீராட்டுவதால் மக்களுக்கும் ஊருக்கும் சிறப்பு ஏற்படும் எனும் நம்பிக்கையில் இவ்விழா அமைந்துள்ளது.

## மாசிமகம் நம்பிக்கைகள்

மாசிமகத்தில் நீத்தார் நினைவுச் சடங்கு, இறந்தோருடைய ஆன்மா வாழ்கின்ற மக்களை நல்ல முறையில் காப்பாற்றும் எனும் நம்பிக்கையிலும் செய்யப்படுகிறது. கடல் தீர்த்தவாரி அன்று,

“முப்பது முக்கோடி தேவர்களும் நாற்பத்தெட்டாயிரம் ரிஷிகளும் எல்லாரும் கூடி தீர்த்தமாடுகிறார்கள்”.

இதன் பின்னால் பக்தர்கள் நீராடினால் ரிஷிகளுடைய ஆசியும், தேவர்களுடைய அருளும் கிடைப்பதாகக் கூறப்படுகின்றது.

மாசி மகத்தன்று விரதம் இருந்தால் மறுபிறவி இல்லை. இந்நாளில் விரதம் இருந்து அன்னதானம் செய்யும் பெண்களுக்கு குறிப்பாக ஆண் பிள்ளை பிறக்கும் என்கின்ற நம்பிக்கை

மக்களிடையே இடம்பெற்றுள்ளதால் மாசிமகத் திருவிழாவில் அன்னதானம் மிகுதியாக வழங்கப்படுகிறது.

மாசி மாதத்தில் அதிகாலையில் நீராடி வேள்வி செய்து நோன்பு இருந்தால் அதிக சக்தி பெறமுடியும். இறைவனுடைய அருளைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை அடிப்படையிலேயே அம்மாதத்தில் வருகின்ற திரயோதசி, சதுர்தசி, பௌர்ணமி ஆகிய நாட்களில் நீராடுதல் மேற்கொள்ளப்படுகிறது. என்றாலும் பௌர்ணமி அன்று மக நட்சத்திரம் கூடுகின்ற அந்நாளில் நீராடுவது மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

## தெய்வத்தைத் தீர்த்தவாரி செய்தல்

புதுச்சேரியில் உள்ள கிராமங்களிலிருந்து தீர்த்தவாரி திருவிழாவிற்குத் தெய்வங்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு அவை பந்தலின் கீழ் வரிசையாக நிறுத்தி வைக்கப்படுகின்றன. திருவிழாவிற்கு வருகின்ற அனைத்துத் தரப்பு மக்களும் இங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தெய்வங்களுக்குத் தேங்காய் உடைத்து, தீப ஆராதனைச் செய்து வழிபடுகின்றனர். சிலர் கடலில் நீராடி ஈர உடையுடன் வந்து தெய்வத்தினை வணங்குவதைக் காணமுடிந்தது. இத்திருவிழாவிற்கு வரும் தெய்வங்கள் புதுவையில் இருந்து மட்டும் அல்லாது தமிழகப் பகுதிகளிலிருந்தும் ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டு மக்களுடைய வழிபாட்டிற்காக நிறுத்தி வைக்கப்படுகின்றன. குறிப்பாகச் செஞ்சியிலிருந்து செஞ்சி அரங்கநாதர், மயிலம் சுப்பிரமணியர், தீவனூர் பொய்யாமொழிப் பிள்ளையார், மேல்மலையனூர் அங்காளம்மன், சிங்கிரிக் கோயில் லட்சுமி நரசிம்மர் போன்ற தெய்வங்கள் இத்திருவிழாவின்போது மக்களால் விரும்பி வழிபடப்படுவதை அறியமுடிகிறது. பெரியவர் முதல் சிறியவர் வரை அனைவரும் திரளாக வந்து இத்திருவிழாவில் கலந்து கொள்கின்றனர். இம்மாசிமக திருவிழா நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து செய்யப்பட்டு வருவதாகக் கள ஆய்வில் அறியமுடிகிறது.

இத்திருவிழாவிற்கு வருகின்ற பல தரப்பு மக்களும் தங்களுடைய குடும்பத்தோடு கடலில் முழுகி அல்லது கடல் நீரை மேலே தெளித்துக்கொண்டு இறைவனுக்குக் கற்பூரம் ஏற்றியோ, கற்பூரம் ஏற்றியும் தேங்காய் உடைத்தும் தெய்வங்களை வழிபட்டுச் செல்கின்றனர்.

## பிதிர்க்கடன் செலுத்துதல்

மாசிமகத் திருவிழாவிற்கு வருகின்ற மக்கள் தங்களது இல்லங்களில், அண்மையில் இறந்த தன் முன்னோருக்குத் திதி எனும் பிதிர்க்கடனைச் செய்கின்றனர். குடும்பத்தினுடைய தலைவரோ அல்லது இறந்தவர்களுடைய உறவினரோ அக்குடும்பத்தில் இறந்தோருக்கான சடங்கில் ஈடுபடுகின்றனர். இறப்பு சடங்கின்போது செய்யப்படுகின்ற பதினாறாம் நாள் சடங்கு போன்றே மாசிமகத்தன்று பிதிர்க்கடன் செய்யும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது மகத்தன்று கடற்கரையில் அமர்ந்துள்ள ஐயரிடம் பிதிர்க்கடன் செய்வதற்கான எள், காய்கறிகள், எண்ணெய், பச்சரிசி போன்றவற்றைக் கொடுத்து இறந்தவருடைய பெயரையும் அவருடைய பிறந்த நட்சத்திரத்தையும் கூறி முன்னோர்க் கடனைச் செலுத்துவர்.

முன்னோர்க் கடன் செலுத்துபவர்கள் விஷ்ணு கோத்திரமாக இருப்பின் நெற்றியில் நாமத்தை இட்டுள்ள (அணிந்துள்ள) ஐயரிடம் இச்சடங்கை மேற்கொள்ளுவர். சைவராக இருப்பின் நெற்றியில் பூசை இட்டுள்ள ஐயரிடம் இச்சடங்கினைச் செய்வதைக் கள ஆய்வின்போது காணமுடிந்தது.

## முடிவுரை

மக்கள் தங்களது வாழ்க்கையில் நீராடுதலை மேற்கொண்டிருந்தனர். குறிப்பிட்ட மாதம், குறிப்பிட்ட நாள், குறிப்பிட்ட நட்சத்திரம் பொருத்தி வருகின்ற நன்னாள் நீராடுவதற்குச் சிறந்த நாளாக இருந்துள்ளமையைக் காணமுடிகின்றது.இறந்தவர்களுடைய ஆன்மா சாந்தி அடையவும் வழிவழியாக வரும் பரம்பரையைக் காக்க வேண்டியும் நீத்தார் சடங்கு மாசிமகத்தன்று செய்யப்படுகிறது. மாசிமகத்தன்று அதிகாலையில் நீராடி வேள்வி செய்தால் கடவுளின் அருளைப் பெறலாம். விரதம் இருந்தால் மறுபிறவியைப் போக்கலாம். அன்னதானம் செய்தால் ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கலாம் போன்ற நம்பிக்கையின் அடிப்படையில் இவைகள் செய்யப்படுகின்றன. கடல் தீர்த்தவாரி ஆடினால் கடவுளின் ஆசியைப் பெறலாம் என்ற நம்பிக்கையில் கடல் தீர்த்தவாரி நிகழ்த்தப்படுகிறது.

## References


Aravanan, K.P (1993) Tamil Samuthaya Varalaru (Thol Samaya Kalam), Tamil Kottam, Pondicherry, India

Gandhi, K. (2003) Tamilar Palakka Valakangalum Nambikaikalum, International Insitue of Tamil Studies, Chennai, India

Manikkam, A. (2002) Pattinapalai, Varthaman Pathipagam, Chennai, India

Manikkam, A. (2009) Nattrinai, Varthaman Pathipagam, Chennai, India

Ramasubramaiyam, V.T. (1998a) Appar Thevaram 5 Thirumurai, Varthaman Pathipagam, Chennai, India

Ramasubramaiyam, V.T. (1998b) Giyanasambandar Thevaram, Thirumayilai Pathipagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License